## வரையறுக்கப்பட்ட ரக்னா ஆரக்ஷக லங்கா கம்பனி – 2015/2016

வரையறுக்கப்பட்ட ரக்னா ஆரக்ஷக லங்கா கம்பனியின் 2016 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப நட்ட மற்றும் விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2016 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற மீளாய்வாண்டின் கம்பனியின் செயலாற்றல் தொடர்பான எனது அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான பணிப்பாளர் சபையின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு பணிப்பாளர் சபை பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன்.

### 1.4 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 01 இன் 10 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது கம்பனியால் பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டுக் கோட்பாடுகள் மற்றும் கொள்கைகள் மற்றும் அக் கணக்கீட்டுக் கொள்கைகள் தொடர்ச்சியாக பிரயோகிக்கப்படுவதை பிரதிபலித்தல் என்பன தொடர்பாக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் 01 இன் 32 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்கீட்டு நியமத்தால் வேண்டப்பட்டு அல்லது அனுமதிக்கப்பட்டிருந்தால் தவிர சொத்துக்களை பொறுப்புக்களிற்கு எதிராகவும் வருமானத்தை செலவினங்களிற்கு எதிராகவும் எதிரீடு செய்வதற்கு நிறுவனம் அனுமதிப்பதில்லை. எனினும் 2016 மார்ச் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 18,118,028 கூட்டுத்தொகையான கடன்பட்டோரின் 13 செலவு மீதிகள் அத் திகதியில் உள்ளவாறு காணப்பட்ட கடன்பட்டோரின் வரவு மீதிகளிற்கு எதிராக எதிரீடு செய்யப்பட்டிருந்தன.

(இ) மீளாய்வாண்டின் பிற்போடப்பட்ட வரிப் பொறுப்புக்களின் ஆரம்ப மீதி ரூபா 2,616,217 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் வருமான வரிப் பொறுப்புக்கள் தொடர்பாக இலங்கை கணக்கீட்டு நியமம் 12 இன் பிரகாரம் தேவையான வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும் மீளாய்வாண்டிற்காக பிற்போடப்பட்ட வரிக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இற்கு முரணாக கொண்டுசெல்லும் பெறுமதி பூச்சியமாக காணப்பட்ட 04 சொத்து விடயங்களிற்கு பெறுமானத்தேய்வு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததன் காரணமாக ரூபா 1,624,380 தொகையான

பெறுமானத்தேய்வு ஏற்பாடுகள் சொத்துக்களின் கிரயத்தை விஞ்சி மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(உ) இலங்கை கணக்கீட்டு நியமம் 19 இன் 64 ஆம் பந்தியால் வேண்டப்பட்டவாறு ஊழியத்தின் பின்னரான நலன்களிற்கான ஏற்பாடுகளை கணிப்பிடும் போது எதிர்பார்க்கப்பட்ட அலகு கடன் முறை பிரயோகிக்கப்பட வேண்டிய போதிலும் அதற்கு முரணாக ஊழியர்களின் கடைசியாக பெறப்பட்ட சம்பளம் மற்றும் சேவைக் காலப்பகுதி என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு கணிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அவ்வாறு கணிப்பீடு செய்யப்பட்டு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட பட்டியல்களின் பிரகாரம் ஓய்வூதியப் பணிக்கொடைக்கான படிகள் மீதான பொறுப்பு ரூபா 53,143,463 தொகையான போதிலும் நிதிக்கூற்றுக்களில் ரூபா 54,097,253 தொகையாக காட்டப்பட்டிருந்ததன் காரணமாக ரூபா 953,790 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(ஊ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு வாடிக்கையாளரிடமிருந்து வைப்புப் பணமாக கம்பனிக்கு கிடைத்திருந்த ஐ.அ.டொலர் 74,935 தொகை நாணயமாற்றம் செய்யப்பட்ட போது கணக்காய்வின் கணிப்பீட்டின் பிரகாரம் ரூபா 1,458,107 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. மேலும் மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்ட வாடிக்கையாளர் வைப்புக் கணக்குகளில் காணப்பட்ட ஐ.அ.டொலரின் நாணயமாற்று விகிதத்தை சீராக்கம் செய்த போது ரூபா 1,388,042 தொகையான பரிமாற்ற நட்டம் ஏற்பட்டிருந்த போதிலும் அது கணக்குகளில் சீராக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை.

(எ) மீளாய்வாண்டிற்காக உத்தியோகத்தர்களிடமிருந்து கழிக்கப்பட்ட ரூபா 1,894,309 தொகையான உழைக்கும் போதே செலுத்தும் வரி கம்பனியால் செலுத்தப்படும் போது கம்பனியின் செலவினமாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. மேலும் கணக்காய்வின் கணிப்பீடுகளின் பிரகாரம் 2016 மார்ச் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய உழைக்கும் போதே செலுத்தும் வரி மீதி ரூபா 574,971 ஆக காணப்பட்ட போதிலும் அது நிதிக்கூற்றுக்களில் ரூபா 2,189,287 ஆக அதாவது ரூபா 1,614,316 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஏ) 2015 ஏப்ரல் 01 இல் உள்ளவாறான பெறவேண்டிய நிலையான வைப்பு வட்டி ரூபா 2,470,047 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்ததுடன் கம்பனியின் காணி மற்றும் கரையோர பாதுகாப்புப் பிரிவால் நிலையான வைப்புக்கள் மீதான வட்டி வருமானக் கணிப்பீட்டின் போது ஏற்பட்ட தவறுகள் காரணமாக மீளாய்வாண்டிற்கான வட்டி வருமானம் ரூபா 8,153,049 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஐ) கம்பனியின் பிரதான கட்டிட நிர்மாணம் தொடர்பான மண் பரிசோதனை, மதியுரை சேவைகள் மற்றும் வரைபட திட்டங்கள் போன்ற நிர்மாண வேலைகள் தொடர்பான ஆரம்ப வேலைகளிற்காக ரூபா 739,461,677 கிரயம் ஏற்பட்டிருந்ததுடன் நிர்மாண நடவடிக்கை 2015 யூலை 03 இலிருந்து கைவிடப்பட்டிருந்தது. எனினும் இக் கிரயமானது நிதி நிலைமைக் கூற்றில் சொத்துக்களின் கீழ் கட்டிட நிர்மாண வேலையாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அது பௌதீக ரீதியாக காணப்படவில்லை.

(ஒ) வருமான வரிக் கொடுப்பனவு செலுத்தப்படாததன் காரணமாக முன்னைய பெறுமதி கணிப்பீட்டின் 04 ஆண்டுகளிற்கான தண்டப்பணமாக கம்பனியால் ரூபா 408,162,229 கூட்டுமொத்தத் தொகை செலுத்தப்பட வேண்டுமென உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தால் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஓ) பௌதீக இருப்பு மெய்மையாய்வு அறிக்கைகளின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான கம்பனியின் கையிலுள்ள துப்பாக்கி ரவைகளின் பெறுமதி ரூபா 38,128,032 தொகையாக காணப்பட்ட போதிலும் இருப்பு பதிவேடுகளின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் ரூபா 26,438,889 பெறுமதி காட்டப்பட்டிருந்தமையால் ரூபா 11,689,143 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(ஔ) வியாபாரக் கடன்பட்டோர்களின் (உள்ளூர் பிரிவு) கீழ் 03 அரசாங்க நிறுவனங்களிடமிருந்து பெறவேண்டியதாக ரூபா 36,519,077 தொகை காட்டப்பட்டிருந்த போதிலும் உரிய அரசாங்க நிறுவனங்களின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் அப் பெறுமதி ரூபா 25,887,599 ஆக காணப்பட்டதனால் ரூபா 10,631,478 வேறுபாட்டைச் சுட்டிக்காட்டுகின்றது.

(க) 2016 மார்ச் 31 இல் உள்ளவாறு 12 கடன்பட்டோர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 32,101,487 மற்றும் ஐ.அ.டொலர் 22,335 தொகையான மீதிகளில் உரிய கடன்பட்டோர்களால் உறுதிப்படுத்தப்பட்டிருந்த மீதிகள் முறையே ரூபா 13,047,135 மற்றும் ஐ.அ.டொலர் 374 ஆக காணப்பட்டன. அதன் பிரகாரம் கடன்பட்டோர் மீதிகளில் முறையே ரூபா 19,054,352 மற்றும் ஐ.அ.டொலர் 21,961 வேறுபாடுகள் காணப்பட்டன.

(கா) நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2016 மார்ச் 31 இல் உள்ளவாறான கரையோரப் பாதுகாப்பு பிரிவின் வியாபாரக் கடன்பட்டோர் மீதிகளின் கூட்டுமொத்தம் ரூபா 1,418,390,685 ஆக காணப்பட்ட போதிலும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட விபரமான பட்டியல்களின் பிரகாரம் இது ரூபா 1,398,444,298 ஆக காணப்பட்டதனால் ரூபா 19,946,387 தொகையான வேறுபாடு காணப்பட்டதுடன் அவ் வேறுபாட்டை இணக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(கி) 2016 மார்ச் 31 இல் உள்ளவாறான கம்பனியின் ரூபா 2,289,588,565 வியாபாரக் கடன்பட்டோர் மற்றும் ஏனைய பெறவேண்டிய மீதியில் உள்ளடக்கப்பட்ட வரையறுக்கப்பட்ட அவன்ட் கார்ட் மெரிரைம் சேர்விசஸ் (தனியார்) கம்பனியிடமிருந்து பெறவேண்டிய ரூபா 1,770,603,355 மீதி மற்றும் நிதிக்கூற்றுக்களில் அக் கம்பனிக்கு செலுத்த வேண்டியதாக காட்டப்பட்ட ரூபா 762,731,509 மீதி என்பன அக் கம்பனியால் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும் அவன்ட கார்ட் கம்பனியால் ரக்னா ஆரக்ஷக லங்கா கம்பனிக்கு எதிராக சிங்கப்பூர் நீதிமன்றத்திற்கு கையளிக்கப்பட்ட பிணக்குத்தீர்த்தல் வழக்குத் தீர்ப்பாக ஐ.அ.டொலர் 5,000,000 மற்றும் சிங்கப்பூர் டொலர் 826,000 வரையறுக்கப்பட்ட அவன்ட் கார்ட் மெரிரைம் சேர்விசஸ் (தனியார்) கம்பனிக்கு செலுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டோ அல்லது ஏற்பாடு செய்யப்பட்டோ இருக்கவில்லை.

(கீ) கம்பனியால் தவறுகளை சீராக்கம் செய்வதற்காக பேரேட்டுக் கணக்குகளில் மீளாய்வாண்டின் போது ரூபா 34,536,430 தொகையான சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் உரிய நாட்குறிப்புப் பதிவுகள் மற்றும் அத்தகைய சீராக்கங்கள் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரால் அங்கீகரிக்கப்பட்டிருக்காததால் அச் சீராக்கங்களை கணக்காய்வின் போது ஏற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

(கு) கம்பனியின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட கட்டப்பாட்டுக் கணக்கிலுள்ள ரூபா 4,575,458 வரவு மீதிகள் மற்றும் ஏனைய 2 கட்டுப்பாட்டுக் கணக்குகளிலுள்ள ரூபா 90,882,492 செலவு மீதிகள் தொடர்பான விபரமான பட்டியல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(கூ) கம்பனியின் நிதிக்கூற்றுக்களில் குறுங்கால வைப்புக்களின் கீழ் காட்டப்பட்ட ரூபா 115,818,757 பெறுமதியான நிலையான வைப்புக்கள் மற்றும் நிதிக் குத்தகைப் பொறுப்புக்களின் கீழ் காட்டப்பட்ட ரூபா 2,261,874 பொறுப்பு தொடர்பாக நேரடியான மீதி உறுதிப்படுத்தல்கள் பெறப்பட்டிருக்கவில்லை.

(கெ) கம்பனியின் நிதிக்கூற்றுக்களில் செலுத்த வேண்டிய வைப்புக்களின் கீழ் உள்ளடக்கப்பட்ட ரூபா 96,775,692 தொகையான வாடிக்கையாளர்களால் மேற்கொள்ளப்பட்ட வைப்புக்கள் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 மறுப்பு அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.4 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக என்னால் கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றினை பெற்றுக்கொள்ள முடியாதுள்ளது. அதற்கிணங்க இந்நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் ஒன்றினை நான் வெளிப்படுத்தவில்லை.

### 2.1.1 ஏனைய விடயங்கள்

2015 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வரையறுக்கப்பட்ட ரக்னா ஆரக்ஷக லங்கா கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் தனியார் கணக்காய்வு நிறுவனமொன்றால் கணக்காய்வு செய்யப்பட்டு முனைப்பழியுள்ள அபிப்பிராயத்துடன் 2016 மே 16 இல் கணக்காய்வு அறிக்கை வழங்கப்பட்டிருந்தது.

### 2.1.2 ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 163(2) ஆம் பிரிவின் மூலம் வேண்டப்பட்டவாறு, நான் பின்வருமாறு குறிப்பிடுகின்றேன்.

(அ) மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படையும் கணக்காய்வின் நோக்கெல்லை மற்றும் வரையறைகளும் மேற்குறிப்பிடப்பட்டவாறு இருக்கின்றன.

(ஆ) இவ் அறிக்கையில் மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் குறிப்பிடப்பட்ட முக்கியத்துவமான வரையறைகளிற்கு உட்பட்டு

- கணக்காய்விற்கு அவசியமான சகல தகவல்களையும் விளக்கங்களையும் போதியளவில் நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என்பதுடன் இதுவரையான எனது பரீட்சிப்பின் மூலம் தென்படுகின்றவாறு முறையான கணக்கீட்டுப் பதிவேடுகள் கம்பனியால் வைத்திருக்கப்புடவில்லை என்பதும்,

- 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 151 ஆம் பிரிவின் தேவைப்பாடுகளுடன் கம்பனியினது நிதிக்கூற்றுக்கள் இணங்குகின்றன என்பதும் எனது அபிப்பிராயம் ஆகும்.

### 2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டம் | |
| (i) 131 ஆம் பிரிவு | வருடாந்த பொதுச் சபைக் கூட்டத் திகதியிலிருந்து 30 வேலை நாட்களினுள் கம்பனியின் வருடாந்த அறிக்கையின் பிரதியொன்று கம்பனிப் பதிவாளரிற்கு அனுப்பப்பட வேண்டிய போதிலும் 2014/2015 ஆம் ஆண்டுகளிற்கான வருடாந்த அறிக்கை |

| | | |
|---|---|---|
| | | அனுப்பப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) 150(1) ஆம் பிரிவு | மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 செப்தெம்பர் 30 இற்கு முன்னர் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் உரிய நிதிக்கூற்றுக்கள் 2017 யூலை 12 இலேயே சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. |
| | (iii) 184(அ) பிரிவு | கம்பனியின் அனைத்து வணிக மற்றும் ஏனைய நடவடிக்கைகள் கம்பனியின் பணிப்பாளர் சபையின் பணிப்புரை மற்றும் மேற்பார்வையின் கீழ் முகாமை செய்யப்பட வேண்டிய போதிலும் 2015 சனவரி 28 தொடக்கம் ஏப்ரல் 07 வரையான 02 மாத காலப்பகுதியின் போது பணிப்பாளர் சபையின்றி கம்பனியின் வணிகம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. |
| | (iv) 223(2) ஆம் பிரிவு | பணிப்பாளர் சபையின் மாற்றங்கள் தொடர்பான ஆவணங்கள் கம்பனிப் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் நிதிப்பிரமாணம் 751 | ரூபா 32,875,204 பெறுமதியான இருப்புக்கள் தொடர்பாக இருப்புப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | ரூபா 146,632,843 கிரயமான நிலையான சொத்துக்கள் தொடர்பாக நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச்சட்டத்தின் 26(1)எல் பிரிவு | வரி அறவிடப்படும் இலாபக் கணிப்பீட்டின் போது ரூபா 33,793,700 தொகையான தேசத்தை கட்டியெழுப்பும் வரிச் செலவினம் இலாபத்திற்கு சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்ததால் வரிப் பொறுப்பு ரூபா 9,462,236 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. |

### 2.3 போதியளவு அதிகாரத்தால் ஆதாரப்படுத்தப்படாத கொடுக்கல்வாங்கல்கள்

ரூபா 535,681,123 மற்றும் ஐ.அ.டொலர் 1,000,000 தொகைகள் முறையே இலங்கை வங்கி மற்றும் மக்கள் வங்கியின் நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்ததுடன் ரூபா 20,607,193 தொகை திறைசேரியின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளாமல் திறைசேரி உண்டியல்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான கம்பனியின் செயற்பாட்டு விளைவு ரூபா 356,674,678 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 727,118,969 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 370,444,291 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. தேசிய கொள்கைகள் மற்றும் முகாமைத்துவ சபையின் மாற்றங்கள் காரணமாக மீளாய்வாண்டின் செயற்பாட்டு வருமானம் ரூபா

779,578,114 ஆல் குறைவடைந்தமை மேற்படி நிதி விளைவுகளில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு பிரதானமான காரணமாக இருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 திட்டமிடல்

2014 பெப்ரவரி 17 ஆம் திகதிய 01/2014 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் மிளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 4.1.2 செயற்பாடும் மீளாய்வும்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய இரண்டு ஆண்டுகளின் போது கம்பனியின் செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பான பகுப்பாய்வு கீழே காட்டப்பட்டுள்ளது.

| | விபரம் | 2015/2016 | 2014/2015 | 2013/2014 |
|---|---|---|---|---|
| (அ) | செயற்பாட்டு வருமானம் | | | |
| | கரையோரப் பாதுகாப்பு செயற்பாடுகள் (ரூபா) | 807,661,049 | 1,450,210,877 | 1,817,787,672 |
| | காணிப் பாதுகாப்பு செயற்பாடுகள் (ரூபா) | 996,584,466 | 1,133,612,752 | 1,120,557,361 |
| (ஆ) | வேலையிலீடுபடுத்தப்பட்ட பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் | | | |
| | கரையோரப் பாதுகாப்பு செயற்பாடுகள் (எண்ணிக்கை) | 835 | 825 | 695 |
| | காணிப் பாதுகாப்பு செயற்பாடுகள் (எண்ணிக்கை) | 2143 | 2736 | 2684 |
| (இ) | காணிப் பாதுகாப்பு சேவைகளை பெற்றுக்கொள்வதை மீளப்பெற்ற நிறுவனங்களின் எண்ணிக்கை | 19 | 22 | 04 |

மேற்படி புள்ளிவிபரங்களின் பிரகாரம் கம்பனியின் கரையோரப் பாதுகாப்பு செயற்பாடுகள் மீதான வருமானம் மற்றும் காணிப் பாதுகாப்பு செயற்பாடுகள் மீதான வருமானம் என்பன 2013/2014 ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் போது முறையே ரூபா 1,010,126,623 மற்றும் ரூபா 123,972,895 ஆல் குறைவடைந்திருந்தன.

2015 ஆம் ஆண்டின் பின்னர் அரச நிறுவனங்கள் பாதுகாப்புச் சேவைகளை வழங்குவதற்கான போட்டிக் கேள்விகளை ஏற்றுக்கொள்வதற்கு அனுமதிக்கப்பட்டிருந்ததுடன் கம்பனியால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த கூறுவிலைகள் ஏனைய நிறுவனங்களை விட உயர்வாக இருந்ததன் காரணமாக அரச துறைக்கு பாதுகாப்புச் சேவைகளை வழங்குவதற்கான சந்தைப் பங்கு கம்பனிக்கு இழக்கப்பட்டிருந்தமை கம்பனியின் செயற்பாட்டு வருமானம் வீழ்ச்சியடைந்தமைக்கு பிரதான காரணமாக இருந்தது.

எனினும் தேசியக் கொள்கைகளின் மாற்றங்கள் காரணமாக பிரதான வணிக வாய்ப்புக்களை இழப்பதற்கான ஆபத்து காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

கம்பனியானது புதிய வணிக வாய்ப்புக்களை பகுப்பாய்வு செய்வதன் மூலம் ஆபத்தை குறைப்பதற்கு பொருத்தமான மாற்று நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை.

**4.2 பகுப்பாய்வு ரீதியான மீளாய்வு**

| | | 2015/2016 | 2014/2015 | அதிகரிப்பு/(குறைவு) |
|---|---|---|---|---|
| (அ) | மொத்தலாப விகிதம் (%) | 29.01 | 38.08 | (9.07) |
| (ஆ) | தேறியலாப விகிதம் (%) | 26.44 | 35.75 | (9.31) |
| (இ) | பங்கொன்றிற்கான உழைப்பு விகிதம் | 713.06 | 1,453.64 | (51)(சதவீதம்) |

கம்பனியின் மொத்தலாப விகிதம், தேறியலாப விகிதம் மற்றும் பங்கொன்றிற்கான உழைப்பு விகிதம் என்பன முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது முறையே 9 சதவீதம், 9 சதவீதம் மற்றும் 51 சதவீதத்தால் குறைவடைந்திருந்தன.

**4.3 முகாமைத்துவ நடவடிக்கைகள்**

கம்பனியின் அமைப்பு அகவிதியில் குறிப்பிடப்பட்ட கம்பனியின் நோக்கங்களிற்கு முரணாக கம்பனியால் வெளித் தரப்பினர்களிற்கான சிற்றுண்டிச்சாலை சேவையொன்று அமுல்ப்படுத்தப்பட்டிருந்தது.

**4.4 பதவியணியினர் நிர்வாகம்**

2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1 ஆம் பிரிவின் பிரகாரம் அமைப்புத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்காததுடன் சுற்றறிக்கையின் 9.3 ஆம் பிரிவின் பிரகாரம் ஊழியர்களின் சம்பள அளவுத் திட்டங்கள், ஆட்சேர்ப்புக்கள் மற்றும் பதவியுயர்வு நடைமுறைகள் பொது முயற்சிகள் திணைக்களத்தின் அங்கீகாரம் இன்றி அமுல்ப்படுத்தப்பட்டிருந்தன.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 உள்ளகக் கணக்காய்வு**

மீளாய்வாண்டிற்காக உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**5.2 கணக்காய்வுக் குழு**

2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 7.4.1 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கள் மீளாய்வாண்டின் போது அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**5.3 பெறுகை மற்றும் ஒப்பந்த செயன்முறை**

2006 இன் அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.2 ஆம் பந்தியின் பிரகாரம் பிரதான பெறுகைத் திட்டம் கம்பனியால் தயாரிக்கப்பட்டிருக்காததுடன் அதன் காரணமாக பொருட்களை கொள்வனவு செய்யும் தேவைப்பாடு, அவை பெறப்பட வேண்டிய காலப்பகுதி மற்றும் பெற்றுக்கொள்ளப்படக்கூடிய முறை தொடர்பாக முறையான திட்டம் காணப்படவில்லை.

**5.4 பாதீட்டுக் கட்டுப்பாடு**

2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.2.7 ஆம் பந்தியின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான பாதீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் காலத்திற்குக் காலம் கம்பனியின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | நிதிக் கட்டுப்பாடு | வருடாந்த பாதீடு, பெறுகைத் திட்டம் மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டம் என்பன தயாரிக்கப்படாமை மற்றும் முதலீட்டிற்கான அங்கீகாரம் பெறப்படாமை |
| (ஆ) | கணக்கீடு | சில கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்படாமை, நிதிக்கூற்றுக்களில் தேவையான வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்படாமை மற்றும் கொடுக்கல் வாங்கல்கள் சரியாக கணக்கீடு செய்யப்படாமை. |
| (இ) | வரி விதிப்பு | செலுத்தப்பட வேண்டிய வரி சரியாக கணிப்பீடு செய்யப்படாமை மற்றும் கொடுப்பனவு உரிய திகதிகளில் மேற்கொள்ளப்படாமை. |
| (ஈ) | பதவியணியினர் நிர்வாகம் | ஊழியர்களின் ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வுத் திட்டங்களிற்கான அங்கீகாரம் பெறப்படாமை |